Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 புரட்டாதி 21 செவ்வாய்க்கிழமை (7-10-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 296

# ஒட்டுசுட்டான் அருகே நேற்று உக்கிர சண்டை

## உயிர்ச் சேதம் அதிகம்

கொழும்பு, ஒக்ரோபர் 7

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஒட்டுசுட்டானுக்கு அருகே கடந்த சனிக்கிழமை முதல் உக்கிரச் சண்டை நடைபெற்று வருகின்றது.

முப்பத்தாறு மணிநேரத்துக்கு மேலாக நடக்கும் இந்த உக்கிரச் சமரில் உயிரிழப்பு உச்சமாக இருப்பதாகக் கள முனைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சனியிரவு ஆரம்பமான இச்சமர் நேற்றுவரை தொடர்ந்த வண்ணம் இருந்தது. யுத்த முனையில் இடம்பெறும் குண்டு வெடிப்புகளின் அதிர்வு பல மைல்களுக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## உயிரிழப்புக் குறித்து முரண்பாடான தகவல்

கொழும்பு, ஒக். 7

ஒட்டுசுட்டான் அருகே கடைசியாக வெடித்திருக்கும் உக்கிரச் சமரில் உயிரிழந்த படையினர், புலிகள் குறித்து வேறுபாடான தகவல்கள் வெளியாகியுள்ளன.

57 படையினர் இதுவரை உயிரிழந்திருப்பதாகப் பிந்திக் கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது.

இச்சமரில் தமது தரப்பில் 34 பேர் கொல்லப்பட்டதாகவும் —

62 படையினர் காயமடைந்ததாகவும் —

புலிகள் தரப்பில் 150 பேர் பலியாக இருநூறு பேர் வரை காயமடைந்ததாகவும் —

இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

சண்டையில் 48 படையினர் பலியானதாகவும் —

காயமுற்ற 145 படையினர் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டதாகவும்—

ரி. என். எல். செய்தி நிறு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கட்சிகள் இன்று சந்திப்பு

மட்டக்களப்பு, ஒக். 7

அரசின் அதிகாரப்பரவலாக்கல் அலகு குறித்து நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஐந்து தமிழ்க் கட்சிகள் கொழும்பில் இன்று சந்தித்துப் பேசவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. டி. பி., புளொட், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளே சந்தித்துப் பேசவுள்ளனர்.

[ஐ-21]

## மட்டு நகரில் உண்ணாவிரதம்

யாழ். மாவட்டத்தில் கைதாகிக் காணாமற்போனோரின் தகவல்களை வெளியிடக்கோரி கிழக்கில் புளொட் அமைப்பினால் ஏற்பாடுசெய்யப்பட்ட உண்ணாவிரத நிகழ்வு நேற்று மட்டக்களப்பு நகர பஸ்நிலையப் பகுதியில் நடைபெற்றது.

பிரதி மாநகர முதல்வர் பெனடிக்ற் தனபாசிங்கம் தலைமையில் நடைபெற்ற அந் நிகழ்வில் சுமார் 125 பேர் கலந்து கொண்டனர்.

(ஐ-21)

## 3 ஹெலிகள் சேதம்

கொழும்பு, ஒக். 7

வன்னி யுத்த முனையில் புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகி இரண்டு நாள்களுக்கு இடையில் மூன்று விமானப் படை ஹெலிகள் சேதமடைந்துள்ளன.

நேற்று முன்தினம் புளியங்குளம் வடக்குப் பகுதிக்கு மேல் வட்டமிட்டபடி புலிகளின் நிலைகள் மீது தாக்குதல்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அறந்தலாவ பொலீஸ் நிலையம் மீது அதிகாலை வேளையில் தாக்குதல்!

### 7 பொலீஸார் பலி! 47 பேர் காயம்!!

கொழும்பு, ஒக். 7

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அறந்தலாவ பொலீஸ் நிலையம் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலின்போது ஆறு பொலீஸாரும் ஒரு சிவிலியனும் உயிரிழந்ததாகவும்—

47 பேர் காயமடைந்ததாகவும்—

இலங்கை வானொலி அறிவித்தது.

தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்ற புலிகள் மீது விமானப்படையினர் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தினர் என்றும்—

அத்தாக்குதலில் பத்துப் புலிகள் கொல்லப்பட்டனர் என்றும்—

புலிகள் சென்றுகொண்டிருந்த டிராக்டர்கள் மற்றும் வாகனங்கள் ஆயுதங்களுடன் நாசமாக்கப்பட்டன என்றும்—

இலங்கை வானொலி மேலும் அறிவித்தது.

இத் தாக்குதலின் போது

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தையிலும் தாக்குதல்; ஏழு பொலீஸார் பலி!

மட்டக்களப்பு, ஒக். 7

"வெற்றி உறுதி" நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் படையினர் மீது ஞாயிற்றுக்கிழமை மாலை விடுதலைப் புலிகள் நடத்திய மற்றொரு அதிரடித் தாக்குதலில் ஏழு பொலீஸாரும், ஊழியர் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

ஓமந்தைப் பகுதியில் அமைந்துள்ள "வெற்றி உறுதி" படையினரின் இருபதாவது பாதுகாப்பு வரிசையில் ஓரிடத்திலேயே புலிகள் இத்தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதலில் புலிகள் தரப்புக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை.

(ஐ-21)

## ஏ. ரி. ஆரியரத்னா உட்பட மனித உரிமை ஆணைக்குழுவின் உறுப்பினர் இன்று யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஒக். 7

ஜனாதிபதியால் அண்மையில் நியமிக்கப்பட்ட தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆறு உறுப்பினர்கள் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்கள்.

முன்னர் இயங்கி வந்த மனித உரிமைச் செயலணிக் குழு அண்மையில் கலைக்கப்பட்டதை அடுத்து இந்த ஆணைக்குழு உருவாக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் முதல் தடவையாக இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்.

இக்குழுவின் உறுப்பினரும், சர்வோதய அமைப்பின் தலைவருமான ஏ. ரி. ஆரியரத்தினவும் இன்று வருபவர்களில் இடம்பெறுகின்றார்.

இந்த ஆணைக்குழுவின் அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் திறப்பது தொடர்பாகவும், இங்குள்ள நிலைமைகள் தொடர்பாகவும் குழுவினர் இங்கு தங்கியிருக்கும் போது ஆராய்வார்கள்.

[உ-3]

## மட்டுவில் பகுதியில் மோதல்

தென்மராட்சி, ஒக். 7

மட்டுவில் தரவைவெளிப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல்வேளை மோதல் இடம்பெற்றதாகத் தெரிய வருகிறது. அப்பகுதியில் சுமார் இருமணி நேரம் தொடர்ச்சியாக துப்பாக்கிச் சமரும் ஷெல் வீச்சும் இடம்பெற்றன.

கைதடி- மட்டுவில் வீதியில் மட்டுவில் சிவன் கோயில் பகுதியில் படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதைத்தொடர்ந்தே அப் பகுதியில் மோதல் இடம்பெற்றதாக ஒரு தகவல் தெரிவித்தது.

(ஐ-15-117)

## கிழக்குப் பகுதி ஆசிரியர்கள் நேற்று துக்கம் அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு, ஒக். 7

சர்வதேச ஆசிரியர் தினமான நேற்றைய நாளை கிழக்குப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் துக்கதினமாக அனுஷ்டித்தனர்.

ஆசிரியர் தினத்தை ஒட்டிய எந்த நிகழ்வுகளும் பாடசாலைகளில் நடைபெறவில்லை. கல்முனைப் பகுதியைச் சேர்ந்த சில பாடசாலைகளில் கறுப்புக் கொடிகள் [illegible]

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 3 வாக்கெடுப்புகள் நடத்துவதை மறுபரிசீலிக்க ஜனாதிபதி இணக்கம்

கொழும்பு. ஒக். 7

வடக்கு-கிழக்கில் அதிகாரப் பரவலாக்கலுக்கான அலகைத் தீர்மானிப்பதற்கு கிழக்கில் மூன்று சர்வஜன வாக்கெடுப்புகள் நடத்தப்பட வேண்டும் என்ற அரசின் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்ய ஜனாதிபதி சந்திரிகா [illegible] இணங்கியுள்ளார் [illegible] கின்றார்.

நேற்று முன்தினம் இரவு தமிழர் விடுதலைக் கூட்டணி- முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளை ஒன்றாகச் சந்தித்துப் பேசிய சமயமே இது பற்றி ஜனாதிபதி தெரிவித்ததாக அறியவந்தது.

இணைப்புக் குறித்து தீர்மானிக்க சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும்திட்டத்தை தாங்கள் கடுமையாக எதிர்பதாக கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய இரண்டும் ஒரே குரலில் தெரிவித்தனவாம்.

புலிகளுடன் பேச்சு நடத்துவதன் அவசியத்தை கூட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேர்மன்

தொழில் நுட்ப கூட்டுறவாக்கம் - GTZ

# பயிற்சி பெற்ற தொழிலாளர் தேவை

யாழ். மாவட்டத்தில், வாதரவத்தை, கரவெட்டி, சுன்னாகம், பொன்னாலை, அராலி, ஊர்காவற்றுறை, நயினாதீவு, நெடுந்தீவு, வட்டுக்கோட்டை, வல்வெட்டித்துறை, அனலைதீவு, புங்குடுதீவு, வேலணை ஆகிய பகுதிகளில் உள்ள கிராமிய நீர்விநியோக-திட்ட புனரமைப்பு வேலைகளில் பணியாற்றுவதற்கு பின்வரும் துறைகளில் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர்.

★ மின் இணைப்பு வேலை

★ நீர்க் குழாய் பொருத்தும் வேலை

★ மேசன் வேலை

★ தச்சுவேலை

அனுபவமுடையவர்கள் தங்கள் சுயவிவரம், சான்றிதழ் பிரதிகள் ஆகியவற்றை கீழ்க் காணும் விலாசத்திற்கு தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் உள்ள தபால் பெட்டியில் நேரடியாக சேர்ப்பிக்கவும்.

★ அந்தந்தப் பகுதியில் வதிபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**Team Leader,**
**GTZ-JRP,**
**No. 11, Kandy Road,**
**Jaffna.**

(50358)

# மரண அறிவித்தல்கள்

## வயித்திலிங்கம் சின்னப்பு (Driver)

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் தற்போது உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வயித்திலிங்கம் சின்னப்பு (Driver) அவர்கள் 5-10-97 ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

இவர் பூரணத்தின் அன்புக் கணவரும், சிவபூபதி (லதா—தாதி, யாழ். போதனா வைத்தியசாலை), சிவசோதி (சுதா—லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயபாலன் (கொழும்பு), கமலக்கண்ணன் (லண்டன்), ராஜ்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், சிவக்கொழுந்து (பிரான்ஸ்), காலஞ்சென்ற கதிரவேலு ஆகியோரின் மைத்துனரும், அன்னமலரின் (கலா, பிரான்ஸ்) பெரியப்பாவும், அபிரா, ரம்யா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 6-10-97 அன்று உடுவிலில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
சிவபூபதி
(மகள்)

உடுவில்,
சுன்னாகம்.

(50348)

## கார்த்திகேசு சிவபாலசிங்கம்

(நீதிமன்ற பதிவாளர், யாழ்ப்பாணம்)

இணுவில் மேற்கைச் சேர்ந்த கார்த்திகேசு சிவபாலசிங்கம் 6-10-97 இல் காலமானார்.

இவர் கார்த்திகேசு இராசம்மா தம்பதிகளின் அருமைப் புதல்வனும், குணரத்தினம் — யோகம்மா தம்பதிகளின் மருமகனும், கலாவதியின் அன்புக் கணவரும், சி. சரவணபவன் (கனடா), சந்திரவதனி (கனடா), சாதனா (ஜேர்மனி), மாதினி (யாழ். பல்கலைக்கழகம்), சிவதர்சினி (யாழ். பல்கலைக் கழகம்), தயாநிதி (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் தகப்பனாரும், சிவபாலன் (கனடா), ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், சுந்தரம்பிள்ளை பராசக்தி (கனடா), சுப்பிரமணியம் மீனாட்சி (பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், சுன்னாகம்) ஆகியோரின் சகோதரரும், தர்மராஜா சீலாவதி (ஜேர்மனி), லோகநாதன் (கனடா), யோகநாதன் (மலர் ஸ்ரோர்ஸ், மன்னார்). பாலச்சந்திரன், புஸ்பலதா, குணநாதன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 7-10-97 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

தகவல்:
சி. கலாவதி
(மனைவி)

மானிப்பாய் றோட்,
இணுவில் மேற்கு.

(50362)

## ஆறுமுகம் சின்னத்துரை

(ஓய்வுபெற்ற ஓவசியர்)

அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் கரணவாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சின்னத்துரை (ஓய்வுபெற்ற ஓவசியர்) 6-10-97 அன்று காலமானார். அன்னார் யோகம்மாவின் அன்புக் கணவரும், பரந்தாமன் (கனடா). பராபரன் (கனடா), கோமதி (கனடா), மாலதி (கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (7 - 10 - 97) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெறும்.

தகவல்;
மனைவி

கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(50351)

## வாணி விழா நிகழ்வுகள்

யாழ். மாவட்டத்தில் தற்போது மிகவும் சிறப்பாக நடைபெற்று வரும் வாணி விழா நிகழ்வுகளில் இன்று யாழ். மாவட்ட விலை மதிப்புத் திணைக்களத்தின் இந்து மாமன்ற ஆதரவில் காலை 9-30 மணிக்கு வாணி விழா வை. செல்வநாயகம் தலைமையில் இடம்பெறும்.

நாளை புதன்கிழமை ஏழாலை மகாவித்தியாலய வாணிவிழா நிகழ்வுகளில் அதிபர் சிவநடராசா சிறப்புச் சொற்பொழிவுவாற்றவுள்ளார்.

நாளை மறுநாள் வியாழக்கிழமை உடுவில் கோட்டத்தினால் தொண்டுபடும் செயல்முறை, திருமுறைப் பண்ணிசை, நீதிச் செய்யுள் மனனம் போன்ற போட்டிகள் நடத்தப்பட உள்ளன. இராமநாதன் கல்லூரியில் இடம்பெற உள்ள இந்நிகழ்வுகளுக்கு கோட்டக்கல்வி அதிகாரி அ. தற்பரானந்தன் தலைமை வகிக்க உள்ளார்.

(இ-30-152-9)

## உடன் விற்பனை

ஒருநாள் பிறிமா சேவல் குஞ்சுகள் உடன் பெற்றுக் கொள்ளலாம்.

**திருமகள்**
**பண்ணை உற்பத்தி**
**களஞ்சியம்**
418, கே.கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(50361)

## வீடு விற்பனைக்கு

மூன்று அறைகளுடன் கூடிய நல்ல நிலையில் உள்ள வீடு 43, பழம் றோட், கந்தர்மடத்தில் விற்பனைக்கு உண்டு

தொடர்பு:
**19, பழம் றோட்,**
**யாழ்ப்பாணம்.**

(50359)

## யாருடையது?

மீசாலைச் சந்தையில் கண்டெடுக்கப்பட்ட ஒரு தொகைப் பணம் மீசாலை கண்ணன் தேநீரகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது, ஆதாரங்காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

தெய்வேந்திரம்

(சி/1709)

**UNIVERSITY OF JAFFNA,**
**SRI LANKA**

## FACULTY OF MEDICINE NOTICE

The Medicine appointment For 1990 Batch (13th) will start on 27 th October 1997.

**- Registrar**

University of Jaffna,
Jaffna.

# சம்பந்தன் இன்றுபதவியேற்பு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இரா. சம்பந்தன் இன்று பதவியேற்கவுள்ளார்.

அண்மையில் படுகொலை செய்யப்பட்ட கூட்டணி எம். பி. தங்கத்துரையின் இடத்துக்கு அவர் எம். பியாக நியமிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

நாடாளுமன்றத்தில் இன்று காலை 9-30 மணிக்கு சம்பந்தன் விசுவாசப் பிரமாணம் செய்து கொள்வார்.

கடந்த 14 வருடகால இடைவெளியின் பின்னர் திரு. சம்பந்தன் எம். பி. பதவியை ஏற்கிறார். (ஐ)

**CHUNDIKULI GIRLS' COLLEGE**
**JAFFNA**

## ANNUAL PRIZE GIVING 1997

**Saturday the 11 th October, 1997**
At 9-30 a. m. (New Time)

Chief Guests
**REV. S. S. KARUNAIRAJ**
Supdt., Minister Jaffna Circuit
and
Chairman of the North and East Dist. Synod
and
**Mrs. Elizabeth Satgunadevi Karunairaj**

Chairman
**Ven. J. S. Sarvanandan**
Archdeacon of Jaffna

Parents, Old Girls & Wellwishers are cordially Invited.

**PRINCIPAL, STAFF and STUDENTS.**

(C/1710)

## LANTHU INSTITUTE

**VAN. NORTH - WEST**
**ANAIKODDAI**

**98/99 கலை, வர்த்தகப் பிரிவுகள்**

**யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்குழு**
**(D, M, I,)**

| | | |
|---|---|---|
| கணக்கீடு | — | D. SAM |
| வணிகக்கல்வி | — | B. பசில் |
| பொருளியல் | — | R. இராஜேஸ்வரன் |
| வ. புள்ளி விவரவியல் | — | பிரபல ஆசிரியர் |
| அளவையியல் | — | T. மோகன் |
| தமிழ் | — | பிரபல ஆசிரியர் |
| இந்து நாகரிகம் | — | S. சிவானந்தன் |
| இந்து சமயம் | — | S. சுரேந்திரன் |
| அரசியல் | — | S. பஞ்சாட்சரம் |
| புவியியல் | — | M. இக்னேசியஸ் |
| நாடகமும்அரங்கியலும் | — | M. சந்திரன் |

**ஆரம்பம்:- 11-10-1997**
சனி மாலை 4.00 மணி

குறிப்பு:-

1. அனுமதிகளை 07-10-97 இல் இருந்து பெற்றுக் கொள்ளவும்.
2. சிறிது காலத்திற்கு வணிகக்கல்வி வகுப்பு D.M.I. இல் நடைபெறும்.
3. அலகு I இல் இருந்து ஆரம்பமாகும்.
4. முழுப்பாடத்திட்டமும் முடிக்கப்படும்.
5. அளவையியலுக்கு வெகுவிரைவில் வேறு பிரபல ஆசிரியரும் கற்பிப்பார்.

**- நிர்வாகி**

[49809]

## கண்ணீர் அஞ்சலி

### அரியகுட்டி நாகரத்தினம் (குகன்)

(சபையின் ஆயுட்கால போஷகரும், நீண்ட காலப் பொருளாளரும்)

நாகரத்தினம் (குகன்) அவர்களின் திடீர் மறைவைக் கேட்டு எமது ஆலய சபை ஆழ்ந்த கவலையடைந்துள்ளது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கொட்டடி சித்திவிநாயகரைப் பிரார்த்திக்கின்றோம். அத்துடன் அன்னாரின் குடும்பத்திற்கும் அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஆலய குருக்களும்,
பரிபாலனசபையும்.

**கொட்டடி சித்தி விநாயகர் ஆலயம்,**
**பருத்தித்துறை.**

(சி1714)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதப் படுகொலைகள் அல்ஜீரியாவில் நீடிப்பு!

## மூன்று நாள்களில் 100 பேர் பலி!!

அல்ஜியர்ஸ், ஒக். 7

அல்ஜீரியாவில் தொடர்ந்து நீடித்துவரும் மனிதப் படுகொலைகளில் கடைசியாக கடந்த மூன்று நாள்களில் நடந்த சம்பவங்களில் நூறுபேர் பலியாகியுள்ளனர்.

பொதுமக்கள் மீதான தாக்குதல்களில் கடைசியாக நடந்த சம்பவத்தில் முதன் முறையாக ஷெல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பிளேடா என்ற கிராமமே கடந்த 5 ஆண்டு கால கிளர்ச்சியில் முதன் முறையாக ஷெல் வீச்சுக்கு இலக்காகியுள்ளது.

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஷெல்கள் மலைப் பகுதிகளில் இருந்து இக் கிராமத்தின் மீது ஏவப்பட்டது. இதனால் நால்வர் பலியாகினர். கிராம மக்கள் பெரும் பீதியடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக் கிராமத்தை அண்டிய மலைப்பகுதிகளில் உள்ள ஆயுதம் தாங்கிய இஸ்லாமியத் தீவிரவாதிகளின் தளங்கள் மீது அண்மையில் இராணுவத்தினர் ஹெலிகள் மூலம் ஷெல் வீச்சு நடத்தியிருந்தனர்.

அல்ஜீரிய மக்களால் ''மரண முக்கோணம்'' என அழைக்கப்படும் பிரதேசத்தின் மத்தியபகுதியிலேயே பிளேடா என்ற இக் கிராமம் அமைந்துள்ளது.

இப் பகுதியில் மூன்று நாள்களில் நடந்த நான்கு படுகொலைச் சம்பவங்களில் எண்பதுக்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். வழமைபோல் இவர்களில் பெரும்பாலானோர் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் இறந்துள்ளனர்.

(ஐ)

# சைப்பிரஸ் கடற்பரப்பில் உல்லாசக் கப்பலில் தீ!

## பயணிகள் மீட்கப்பட்டனர்

நிக்கோசியா, ஒக். 7

சைப்பிரஸ் கரையோரப் பகுதியில் 'றொமான்ரிக்கோ'' என்னும் உல்லாசக் கப்பலில் பெரும் தீ பற்றியதை அடுத்து பல நூற்றுக் கணக்கான பயணிகள் அதிலிருந்து அவசர அவசரமாக மீட்கப்பட்டனர்.

சுமார் 700 பயணிகளும், பணியாளர்களும், மாலுமிகளும் மீட்கப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிகாலை வேளை கப்பலில் தீ பரவியதை அடுத்து கலவரமடைந்த பயணிகள் உயிர் காப்புப் படகுகளில் ஏறிக் கொண்டனர். கப்பலில் எஞ்சியிருந்தவர்கள் ஹெலி மூலம் மீட்கப்பட்டனர். தீயணைப்புப் பிரிவினர் கப்பலுக்கு விரைந்துள்ளனர்.

தீயினால் மிகவும் பாதிக்கப்பட்ட இக் கப்பல் ஒரு பக்கமாகச் சாய்ந்து கடலில் மூழ்கிக் கொண்டிருப்பதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

(ஐ)

# சிறுவர் -உளநலம் - 07

## பெற்றோர் - பிள்ளை உறவு


★ பிள்ளைகளை வளர்க்கும் போது அதீத பற்றார்வம் இல்லாமலும், பதகளிப்பு இல்லாமலும், அளவுக்கதிகமான அதிகாரம் செலுத்தாமலும் இருப்பதோடு, அன்பார்வமும் உற்ற உறுதுணையும் கொண்டவர்களாக பெற்றவர் இருப்பது, பிள்ளையைத் தன்னம்பிக்கையோடும் நட்பார்வத்தோடும் வளரத் தூண்டும்.

★ மிதமிஞ்சிய கட்டுப்பாடு விதித்தல் என்பது எந்தளவிற்குத் தவறானதோ அந்தளவிற்கு எவ்விதக் கட்டுப்பாடும் விதிக்காது விடுதலும் தவறான ஒரு பிள்ளை வளர்ப்பு முறையாகும்; எனவே நம்பிக்கையுறுதி, அங்கீகாரம், ஆதாவு, நெறிப்படுத்துகை என்பவற்றோடு கூடிய மிதமான கட்டுப்பாடு என்பதே மிகப் பயன் தருவது.

★ பிள்ளைகளோடு பெற்றோர் தொடர்பு கொள்ளும் போது, தமக்கு ஏற்படுகின்ற மன எழுச்சிகளை அடிக்கடி மீள பரிசீலனை செய்து கொள்வதோடு, தமது வார்த்தையும் செயலும் பிள்ளைக்கு ஒரே செய்தியைத் தெளிவாக வழங்கக் கூடிய நிலையிலும் நடந்து கொள்வது அவசியம்.

★ பிள்ளைகளிடத்துப் பெற்றோர் கட்டுப்பாடற்ற முறையில் தமது மனவெழுச்சிகளை வெளிப்படுத்துவதன் மூலமும், குடும்பத்தில் வளர்ந்தவர் தம் மத்தியில் கட்டுப்பாடற்ற மனவெழுச்சிப் போரில் ஈடுபடுவதன் மூலமும், பிள்ளைகளின் ஆரோக்கியமான வளர்ச்சியில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி விடுவர்.

★ பெற்றோர் பிள்ளையுடன் கொள்ளுகின்ற உறவில் அபசுரம் ஏற்படும் வேளைகளில், பிள்ளை ஒத்த வயதுக் குழுவினருடனான உறவில் அதிக நாட்டம் கொள்கிறது.



ஒக்ரோபர் 10 ஆம் திகதி வரும் உலக உளநல நாளை ஒட்டி இக்குறிப்பு பிரசுரமாகிறது.

# தொலைத்தொடர்பு செய்மதி இன்சாட் 2-டி செயல் இழப்பு!

## இந்தியா முழுவதும் தொலைத் தொடர்பு பாதிப்பு

சென்னை, ஒக். 7

இந்தியாவின் தொலைத் தொடர்பு செயற்கைக்கோள் இன்சாட் - 2டி கைவிடப்பட்டுவிட்டது.

பழுது பார்க்க முடியாத மின்சாரப் பிரச்சினை காரணமாக நேற்று முன்தினம் இரவு இரண்டாவது முறையாக இச் செயற்கைக்கோள் பூமியுடனான தொடர்பை இழந்தது என்று பெங்களூரில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் இன்சாட் — 2டி செயற்கைக் கோளில் இருந்து பூமிக்கு சமிக்ஞைகள் வருவது நின்று விட்டது.

இந்த செயற்கைக்கோளில் எரிபொருள் பிரச்சினையும் நேற்று முன்தினம் ஏற்பட்டது. வியாழக்கிழமை இன்சாட் — 2டி முதன்முறையாக பூமியுடனான தகவல் தொடர்பை இழந்தது.

சில மணிநேரம் இச் செயற்கைக் கோள் இயங்குவது நிறுத்தி வைக்கப்பட்டது. விஞ்ஞானிகள் இச் செயற்கைக் கோளைப் பழுது பார்க்கும் மாபெரும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள்.

வெள்ளிக்கிழமை இன்சாட் — 2டி செயற்கைக் கோள் பூமியுடன் மீண்டும் தொடர்பை ஏற்படுத்தியது.

ஆனால் நேற்று முன்தினம் இதனது இரண்டு சுழலும் சூரிய சக்தி தகடுகளும் விரியவில்லை, இதனால் தகவல் தொடர்புசாத்தியமில்லாமல் போயிற்று; இந்த செயற்கைக் கோள் செயல் இழந்தால் நாடு முழுவதும் தகவல் தொடர்புகள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஒரு மாற்று ஏற்பாடாக இன்சாட்— 2டி செயற்கைக் கோளின் பணிகள் அருகிலுள்ள மற்றைய இன்சாட்ரக செயற்கைக் கோள்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு ஜூன் 4ஆம் திகதி றொக்கட் மூலம் இன்சாட்—2டி விண்ணில் செலுத்தப்பட்டது.

மின் ஓட்டத்தடை காரணமாக இத்தகைய செயற்கைக் கோள் இரண்டாவது முறையாக கைவிடப்பட்டுள்ளது.

முன்னதாக 1988 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட இன்சாட்— 1சி செயற்கைக் கோள் ஓராண்டுக்குப் பின்னர் கைவிடப்பட்டது.

(இ-9)

## உலக அரங்கில்

### பாக்தாத்தில் தாக்குதல்

பாக்தாத், ஒக். 7

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் உள்ள உலக சுகாதார நிறுவன அலுவலகம் ஆயுதம் தாங்கிய நான்கு நபர்களால் தாக்கப்பட்டுள்ளது.

அவர்களில் ஒருவரை ஈராக் இராணுவம் கைது செய்துள்ளது என்றும் —

அவர் ஈரான் நாட்டு இரகசிய அமைப்பு உறுப்பினர் என்று இப்போது தெரியவந்திருப்பதாகவும்—ஈராக் அறிவித்துள்ளது. (இ-9)

### வட கொரியாவில் உணவு உற்பத்தி வீழ்ச்சி

பியாங்யொங், ஒக். 7

கடந்த மூன்று ஆண்டுகளாக கடும் வரட்சி காரணமாக வடகொரியாவின் விவசாய உற்பத்தியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இந்த ஆண்டு அறுவடையிலும் 25லட்சம் தொன் உணவுப் பொருள்கள் குறைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது அங்கு நிலவி வரும் பட்டினிச் சூழலை மேலும் மோசமாக்குமென ஐ. நா. அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். [இ-9]

### ஸ்பெயின் இளவரசி திருமணம்

பாஸிலோனா ,ஒக். 7

ஸ்பெயின் நாட்டு இளவரசி கிறிஸ்ரியனா பாஸ்க் பகுதியைச் சேர்ந்த ஒலிம்பிக் விளையாட்டு வீரர் இனாக்கி உர்தங்கானி என்பவரைத் திருமணம் செய்து கொண்டார்.

இவர்களது திருமணம் பாஸிலோனா நகரில் கடந்த சனிக்கிழமை மிகவும் ஆடம்பரமான முறையில் நடைபெற்றது.

40 நாடுகளின் மன்னர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் உட்பட சுமார் ஆயிரத்து 500 அழைக்கப்பட்ட விருந்தினர்கள் திருமணம் நடைபெற்ற பிரதான தேவாலயத்தில் கூடியிருந்தனர். (இ-9)

# 1,200 வீரரின் எலும்புக்கூடுகள் ஒரே குழியில் புதைக்கப்பட்டன

மணிலா, ஒக். 7

1988 ஆம் ஆண்டு முடிவடைந்த ஈரான்—ஈராக் யுத்தத்தில் மரணமடைந்த ஆயிரத்து 200 வீரர்களின் எஞ்சிய எலும்புக் கூடுகளை ஈரான் நேற்று முன்தினம் மொத்தமாக அடக்கம் செய்தது.

அந்த வீரர்களின் எலும்புக் கூடுகள் ஈரான் - ஈராக் எல்லைப் பகுதியில் இருந்து அண்மைக் காலத்தில் மீட்கப்பட்டிருந்தன. (இ - 9)

# வளைகுடாப் பகுதியில் ஈரான் யுத்தப் பயிற்சி

தெஹ்ரான்,ஒக். 7

ஈரானின் புரட்சிப் படைக் காவலர்களும் கடற்படையினரும் இணைந்து வளைகுடாக் கடற்பரப்பில் நாளை புதன்கிழமை தொடக்கம் யுத்தப் பயிற்சிகளை மேற்கொள்ள உள்ளனர்.

ஒன்பது நாள்கள் நடைபெறும் இப்பயிற்சி 15 ஆயிரம் சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவில் நடைபெறும் என்றும் —

நீர் மூழ்கிக் கப்பல்களும் இப்பயிற்சியில் பங்கெடுக்குமென்றும் — ஈரான் அறிவித்துள்ளது. (இ-9)

# இலங்கைஅரசின்தீர்வுதிட்டம் ஐ.நா. செயலாளர் நம்பிக்கை

ஜெனிவா, ஒக். 7

''இலங்கை அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் மூலம் சிறுபான்மைத் தமிழ் மக்களின் நீண்டகாலக் குறைபாடுகளுக்குத் தீர்வு கிடைக்கும்.''

ஐ. நா. செயலாளர் நாயகம் கோபிஅனான் மேற்கண்டவாறு நம்பிக்கை வெளியிட்டார்.

ஐ. நாவின் 52 ஆவது கூட்டத் தொடரில் பங்குபற்றச் சென்றுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடன் நடந்த சந்திப்பின் போதே அவர் இப்படிக் கூறினார்.

பிடிவாதமாக இருந்துவரும் விடுதலைப் புலிகள் இயக்கம் மீது அழுத்தம் கொடுப்பதற்காகவே இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் ஐ நா. செயலாளரிடம் தெரிவித்தார்.

# வீரப்பனின் சகாக்கள் மைசூரில் உண்ணாவிரதம்

புதுடில்லி, ஒக். 7

சந்தனமரக் கடத்தல் வீரப்பனின் சகாக்கள் என்று கூறப்படுபவர்கள் மைசூர் சிறையில் காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகின்றார்கள்.

உண்ணாவிரதம் இருந்து வரும் மூவரின் உடல் நிலை மோசமடைந்திருப்பதையொட்டி அவர்கள் சிறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

12 பெண்கள் உட்பட 16 பேர் தமக்கெதிரான வழக்குகளை விரைவாக விசாரிக்கும்படி கோரி கடந்த வியாழக்கிழமை தொடங்கி உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இவர்கள் 1991 ஆம் ஆண்டு தொடங்கி சிறையில் இருந்து வருகின்றனர்.

அதே சமயம் நூற்றுக்கு மேற்பட்ட கொலைச் சம்பவங்கள் தொடர்பாக தேடப்பட்டு வருகின்ற சந்தனமரக் கடத்தல் காரனான வீரப்பனுக்குப் புகலிடம் கொடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பெயரில் கர்நாடக—தமிழ்நாடு மாநிலங்களின் எல்லைக் கோட்டில் அமைந்துள்ள காடுகளில் வாழ்ந்த 139 கிராமவாசிகளை பொலீஸார் கைது செய்திருந்தனர்.

இவர்களில் 78 பேர் கடந்த டிசம்பர் மாதத்தில் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்கள். (இ-9)

# பங்களாதேஷில் எதிர்க்கட்சிகள் மறியல்

டாக்கா, ஒக். 7

பங்களாதேஷின் எதிர்க் கட்சியால் நேற்று நடத்தப்பட்ட வீதி மற்றும் ரயில் போராட்டம் காரணமாக போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்தது.

ஆங்காங்கே ஆளும் கட்சித் தொண்டர்களும் எதிர்க் கட்சித் தொண்டர்களும் மோதிக் கொண்டனர்.

(இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பண வாழ்வில் வெள்ளி விழா



| மொட்டாக அன்று: | மலராக இன்று: |
|---|---|
| 07 — 10 — 1972 | 07 — 10 — 1997 |

அருட்சகோதரி
**மேரி புஸ்பராணி (அ. கா.)**
(கார்மேல் மடம் — கல்முனை)

''நான் ஆண்டவரை எப்போதும்
என் கண் முன் வைத்துள்ளேன்.''
(தி. தூ. பணி/ 2; 25)

இன்று தனது துறவற அர்ப்பணவாழ்வில் இருபத்தைந்தாவது வெள்ளி யூபிலி விழாவைச் கொண்டாடும் அருட்சகோதரி மேரி புஸ்பராணி அவர்களை வாழ்த்துகின்றோம்.

- சகோதரர்கள்

நெல்லியடி,
கரவெட்டி.

(50199)

## தேவை

சர்வதேச தொண்டு நிறுவனமான
**MSF இற்கு**
(வரையறையற்ற
வைத்திய சேவை நிறுவனத்திற்கு)
**யாழ். நகரில்**
பெரிய வீடு ஒன்று
வாடகைக்குத் தேவைப்படுகிறது.
தொடர்பு:
**Mr. KEITH,**
C. L. S. புத்தக நிலைய ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (50245)

## நெடுந்தீவில் போஷாக்கு நிகழ்ச்சித் திட்டம்

நெடுந்தீவு கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் தாய் மார்களுக்கான போஷாக்கு நிகழ்ச்சித்திட்டக் கருத்தரங்கு எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறும்.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன் தலைமையில் சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் இடம் பெறும் இக்கருத்தரங்கில் நெடுந்தீவு வைத்திய அதிகாரி வை. யோகேஸ்வரன் உதவி வைத்திய அதிகாரி திருமதி யோ. யாழினி, குடும்ப நல உத்தியோகத்தர் திருமதி முத்துக்குமாரசாமி ஆகியோர் கருத்துரைவழங்குவார்கள். பாடசாலை மாணவர்களுக்கான கருத்தரங்கும் நடைபெறும். (இ-111)

## சிறப்புரை

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் கேட்போர் கூடத்தில் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு தவத்திரு. தனிநாயகம் அடிகளின் தமிழ்ப்பணி குறித்து புலவர் அ. வெ. அரியநாயகம் சிறப்புரை ஆற்றுவார். (இ-111)

## இலவச நூல்

பண்ணாகம்அண்ணா கலை மன்றத்தினர் பாடசாலை மாணவர்களுக்கு தேவையான நீதி நூல்களைத் தொகுத்து ஒரு நூலை வெளியிட்டுள்ளனர்.

இந்நூல் சங்கானைக்கல்விக் கோட்டத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் தற்போது இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளது. (இ-4)

அரியாலை
**புனித யூதா**
மூலமாக பெற்ற
வரங்களுக்கு
நன்றி
அரியாலை
**புனித யூதா**
**பெயர் வாழ்க**
**MRM**
(50343)

## முதியோர் வார நிகழ்வுகள்

கொழும்புத்துறை ஒக். 7

கைதடி அரசாங்க முதியோர் இல்லத்தில் இன்று செவ்வாய் காலை 9.30 மணிக்கு முதியோர் வார நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

காலை 9.30 மணிக்கு இல்ல முதியோர் மங்கள விளக்கேற்றுவர். இல்ல அதிபர் திருமதி இ. துரைரத்தினம் விழாவுக்கு தலைமை வகிப்பார்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் பிரதம விருந்தினராகவும், தென்மராட்சி பிரதேச செயலாளர் பு. சுந்தரம்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

யாழ் மாவட்ட பிரதம பொறியியலாளர் நா. சுந்தரமூர்த்தி, சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா - அப்பாக்குட்டி, மில்க்வைற் தொழில் அதிபர் க. கனகராசா ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

இல்லத்தில்புதிதாக அமைக்கப்பட்ட மண்டபம் திறந்து வைக்கப்படும்.

முதியோர்களைக் கௌரவித்து பரிசு வழங்கல், மாணவர்களை உற்சாகப்படுத்தி பரிசில் வழங்கல் கலைநிகழ்ச்சிகள் ஆகியவையும் இடம் பெறும். (இ-30)

## மிதிபலகை பயணி காயம்

தென்மராட்சி, ஒக். 7

பஸ்ஸில் மிதி பலகையில் பயணம் செய்தவர் தவறி வீழ்ந்து படுகாயமடைந்த சம்பவம் நேற்றுக் காலை சங்கத்தானையில் இடம் பெற்றது.

காயமடைந்தவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

மீசாலை வடக்கைச் சேர்ந்த ஆர். கோடீஸ்வரன் (வயது 46) என்பவரே காயமடைந்தவராவார். (இ-117)

## யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் யாழ்ப்பாணம்.

பழைய மாணவர்களுக்கும், மாணவர்களுக்கும்

## ஊக்குவிப்புப் பணம் வழங்கல்

**1994** ஆண்டு தொடக்கம் இற்றைவரை ஊக்குவிப்புப் பணம் பெறாத க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களும், க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் இரண்டும், இரண்டுக்கும் மேற்பட்ட அதிவிசேட (D) சித்தி பெற்று எமது பாடசாலையில் தொடர்ந்தும் கல்வி கற்கும் மாணவர்களும் ஊக்குவிப்புப் பணம் பெறுவது சம்பந்தமாக கீழ்க்காணும் முகவரியுடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

இவ் வேளையில் **1935** ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி இக் கல்லூரி ஸ்தாபகர் சமூகவாதி அமரர் சி. கந்தையா உபாத்தியாயரினால் எங்கள் கல்லூரிக்கு யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சுன்னாகம் எனப் பெயர் சூட்டப் பெற்றதை நினைவு கூருகின்றோம்.

சேது விபுலானந்தா
செயலாளர்,
ஸ்கந்தவரோதயா
பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம்.

207, கே. கே. எஸ். றோட்,
சுன்னாகம். [சி/1707]

## கண்ணீர் அஞ்சலி

வேலணை பிரதேச செயலக பிரிவு கிராம அலுவலர்
**திரு. குருநாதபிள்ளை எழிற்செல்வன்**
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி குருநாதபிள்ளை இரத்தினம்**

அவர்களின் (17 - 09 - 97 கொழும்பில்) திடீர் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிக்கின்றோம்.

துயருற்றிருக்கும் கணவன், பிள்ளைகள், குடும்பத்தினருக்கு ஆழ்ந்தஅனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

உதவி அரசாங்க அதிபர்,
அலுவலர்கள்,
கிராம அலுவலர்கள்,
சிற்றூழியர்கள்.

பிரதேச செயலகம்,
தீவுப்பகுதி தெற்கு, வேலணை. [50330]

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் சின்னத்தம்பி சந்திரசேகரம்**

(முன்னாள் நிறைவேற்று அதிகாரி, இ. பெ. கூ. தா. யாழ்ப்பாணம், உதவி விநியோக முகாமையாளர் கொழும்பு.)

அவர்கள் காலமான செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அவரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வடமாகாண பெற்றோலியக்
கூட்டுத்தாபன
முகவர்களின் சங்கம்.
(50346)

இதோ!

# மகா நதி யில்

**பூந்துகில்கள்**

புதிது புதிதாய் பூத்திருக்கும்
தீபாவளிப் புடைவைகளுக்கு
ஆம்
கண்கவர் வர்ணங்களில்
பகட்டாய் மிளிர வைக்கும்
புடைவைத் தெரிவிற்கு

# மகா நதி புடைவை அகம்

[முகூர்த்த பட்டுப் புடைவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்]

16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

4, நவீன சந்தை,
சாவகச்சேரி.

[சி/ 1694]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் போராட்டம் நலினமுற முஸ்லிம் காங்கிரஸ் துணை போகாது

## அதிகாரப்பரவலாக்கல் திட்டம் குறித்து அஷ்ரப் கருத்து

கொழும்பு, ஒக். 7

நீண்டகாலமாக முன்னெடுத்துச் செல்லப்படும் தமிழ்மக்களின் போராட்டம் எக்காரணங் கொண்டும் நலினப்படுத்தப்பட முஸ்லிம் காங்கிரஸ் துணையாக இருக்கமாட்டாது.

அமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான எம். எச். எம். அஷ்ரப் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மையில் அமைச்சரவை எடுத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் அலகு குறித்து எல்லாத் தமிழ்க்கட்சிகளுடனும் மீண்டும் பேச்சு நடத்த தீர்மானித்துள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இன்றைய அரசியல் நிலைவரம் குறித்து அவர் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

அண்மையில் அமைச்சரவை எடுத்த தீர்மானங்கள் குறித்து முஸ்லிம் காங்கிரஸின் அதி உயர் பீடம் விரைந்து கூடி பரிசீலிக்கவிருக்கிறது.

சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவது உசிதமா? சாத்தியமா? அதனால் ஏற்படும் விளைவுகள் எவை? என்பன பற்றி முஸ்லிம் காங்கிரஸ் கரிசனை கொண்டுள்ளது.

அமைச்சரவை முடிவுகள் தமிழ்க் கட்சிகளிடையே ஏற்படுத்தியிருக்கின்ற தாக்கங்களை நாம் கவனமாக பரிசீலித்து வருகிறோம்.

நீண்டகாலமாக முன்னெடுத்துச் செல்லப்பட்ட தமிழ் மக்களின் போராட்டம் எக்காரணங் கொண்டும் நலினப்படுத்தப்பட முஸ்லிம் காங்கிரஸ் துணையாக இருக்கமாட்டாது.

தமிழ் சகோதரர்களின் அபிலாசைகளை பலப்படுத்தி வழிப்படுத்தக் கூடிய வகையில் இயன்றவரை முஸ்லிம்களின் தனித்துவம் பாதிக்கப்படாத அளவுக்கு அவர்களின் கரங்களை பலப்படுத்துவது முஸ்லிம் காங்கிரஸின் கொள்கையாக இருக்கிறது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# கலைஞர்கள், சேவையாளரை கௌரவிக்க அமைச்சு முடிவு

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் கலை, இலக்கியம், சமூக சேவை ஆகியவற்றில் ஈடுபட்டு உழைத்தவர்களைப் பாராட்டிக் கௌரவிக்க வடக்குக் கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

கலை, இலக்கியம், சமூக சேவை ஆகியவற்றில் தம்மை ஈடுபடுத்தி அளப்பரிய சேவைகளைச் செய்தோர்கள் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் அனுசரணையுடன் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் இலைமறை காய்களாக உள்ள பெருந்தகைகளை இனங்கண்டு அவர்களது சேவைகளை நன்கறிந்து அவர்களின் பெயர்களைச் சிபார்சு செய்து அனுப்புமாறு சகல பிரதேச செயலகங்களுக்கும் சுற்றறிக்கையும் உரிய படிவங்களும் அமைச்சின் செயலாளரினால் அனுப்பப்பட்டுள்ளன.

கலைத்துறையில் கலைஞர், அண்ணாவி, ஓவியர், சிற்பி, நடிகர் ஆகியோரும்—

இலக்கியத்துறையில் படைப்புகளை உருவாக்குவதற்கு பங்களிப்பு வழங்குவோர் ஆகியோரும்—

சமூக சேவைத் துறையில் சமூகத்தின் துயர் துடைக்க தன்னலமற்ற — சுயலாப நோக்கமின்றி — சேவையாற்றுவோரும் தெரிவு செய்யத் தகைமையுடையோராகக் கருதப்படுகின்றார்கள்.

இவ்வாறானோரைத் தெரிவு செய்து விண்ணப்பங்களை இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ-117)

# நவாலிப் பகுதியில் மணல் அள்ளத்தடை

நவாலி, ஒக். 7

நவாலி கொத்துக்கட்டி மயானத்திற்கும் கல்லுண்டாய்க்குமிடையில் சட்ட விரோதமாக மணல் அள்ளுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் இப் பகுதியிலுள்ள வாய்க்கால்கள், மயானம் என்பவற்றை புனரமைப்புச் செய்வதற்காக பார்வையிடச் சென்ற பிரதேச செயலர் அப்பகுதியில் அனுமதியின்றி மணல் ஏற்றப்படுவதை நேரடியாகக் கண்டுள்ளார். இதனைத் தொடர்ந்து நவாலி தெற்கு கிராம சேவையாளர் இப் பகுதியை அடிக்கடி கண்காணிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளார். மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (ஐ-100)

# உள்ளூரில் ஹெலிகள் உற்பத்தி

கொழும்பு, ஒக். 7

பெல் 212ரக ஹெலிக்கொப்டர்களை தயாரிக்கும் பணியில் ஸ்ரீலங்க விமானப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இதுவரை 3ஹெலிகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும்

மற்றுமொரு ஹெலி தயாரிக்க ப்பட விருப்ப தாகவும் — விமானப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஹெலிகள் விரைவில் பரீட்சார்த்தமாக சேவையில் ஈடுபடுத்தப்படும்என்றும்அவர் கூறினார். (இ-21-3)

# இறைச்சிக்கு விரைவில் நிர்ணய விலை வரும்

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ். மாவட்டத்தில், தற்போது நடைமுறையிலுள்ள இறைச்சி விற்பனை விலையைக் கட்டுப்படுத்தி நிர்ணயிக்கப்பட்ட விலையை அமுலுக்கு கொண்டுவருதற்கான, நடவடிக்கையினை யாழ். செயலக விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களம் விரைவில் மேற்கொள்ளவுள்ளது.

தற்போது இடத்துக்கிடம் மாறுபட்டவிலையில் - ஒருகிலோ மாட்டிறைச்சி 100 ரூபாவில் இருந்து 120 ரூபா வரையும், ஒருகிலோ ஆட்டிறைச்சி 230 ரூபாவில் இருந்து 250 ரூபா வரையும்— விற்பனையாகிவருகிறது.

இதுபோன்ற பலதரப்பட்ட விற்பனை முறையை மாற்றி, யாழ். மாவட்டம் பூராகவும்— நிர்ணயிக்கப்பட்ட விலையில்— மாட்டிறைச்சி ஒருகிலோ 90ரூபாவாகவும் ஆட்டிறைச்சி ஒருகிலோ 180 ரூபாவாகவும் விலை நிர்ணயம் செய்யப்படவுள்ளது.—

இதேவேளை இறைச்சியில் விற்பனைக்குச் சேர்க்கப்படும் எலும்புவகை 25 வீதத்திற்கு உட்பட இருத்தல் வேண்டும்.

அத்தோடு மீன் வியாபாரமுறையில் மாற்று நாடவடிக்கைகள் கையாளப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியான முறையில், கூறுவிலை, உருப்படிவிலைகள் தடை செய்யப்பட்டு நிறுத்தல் அளவை முறையிலேயே மீன் விற்பனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

# சுன்னாகம் - கந்தரோடை வீதி பாதுகாப்பு காப்பரண் நீக்கம்!

வலிகாமம் தெற்கு, ஒக். 7

சுன்னாகம் சந்தியில் இருந்து கந்தரோடை செல்லும் வீதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு காப்பரண் நீக்கப்பட்டுள்ளது.

மக்கள் மீளக்குடியமர்ந்த பின் இதுவரை காலமும் இப்பாதையால் வாகனங்கள் செல்ல முடியாதிருந்தது.

சுன்னாகம், கந்தரோடை ஊடாக அளவெட்டி வரையான பஸ் சேவைகள் கூட இதனால் உடுவில் ஊடாகவே நடைபெற்று வந்தன.

இப்பாதை தடை நீக்கப்பட்டதனால் சுன்னாகம் சந்தைக்கும் ஏனைய இடங்களுக்குமான மக்கள் போக்குவரத்து இலகுவாக்கப்பட்டுள்ளது. (இ-152)

# சிறுவர் தின நிகழ்வுகள்

வலிகாமம்தெற்கு, ஒக். 7

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தினால் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் சர்வதேச சிறுவர் தினம் கொண்டாடப்படும்.

பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் யாழ்ப்பாணம் மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர்.

உடுவில் கோட்டக்கல்வி அதிகாரி அ. தற்பரானந்தன், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆ. சிவஞானசுந்தரம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். [இ-152]

# விவசாயிகள் சம்மேளனம் மூலம் காணிப் பிரச்சினைக்குத் தீர்வு

வலிகாமம் தெற்கு ஒக். 7

கந்தரோடை மடத்தடி என்ற இடத்தில் இரண்டு சகோதரர்களுக்கிடையே நீண்ட காலமாக நிலவி வந்த விவசாய நிலம் சம்பந்தமான பிரச்சினை கந்தரோடை விவசாயிகள் சம்மேளனம் மேற்கொண்ட முயற்சியினால் சமாதானமாக தீர்த்து வைக்கப்பட்டது.

மல்லாகம் நீதிமன்றத்தில் பல ஆண்டுகளுக்கு முன் தொடரப்பட்டு விசாரணைகளின் பின் தீர்க்கப்படாதிருந்து வந்த இப்பிரச்சினையை தற்போது விவசாய சம்மேளனம் தீர்த்து வைத்துள்ளது.

இரு சகோதரர்களுக்கும் விவசாய நிலம் பங்கிடப்பட்டு கடந்த 30 ஆம்திகதி காணி உறுதி எழுதப்பட்டு பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்பட்டது.

இது போன்ற வேறும்சில பிரச்சினைகளையும் விவசாய சம்மேளனம் சமாதானமாக தீர்த்து வைத்துள்ளது. குறிப்பிடத்தக்கது. (இ - 152)

# மேலதிக நேர கொடுப்பனவு

தென்மராட்சி ஒக். 7

யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்களத்தில் கடமையாற்றும் ஊழியர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் 1996 டிசம்பர் மாத வேதன அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன. (இ - 117)

# இரவு வேளை கூரைபிரித்து கடையில் பொருள்கள் சூறை

## நெல்லியடியில் சம்பவம்

நெல்லியடி ஒக். 7

நள்ளிரவு வேளை பல் பொருள் விற்பனை நிலையம் ஒன்றினுள் கூரை பிரித்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த பெருந் தொகைப் பணத்தையும் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களையும் சூறையாடிக் கொண்டு தலைமறைவாகியுள்ளனர்,

இத்துணிகரத் திருட்டுச் சம்பவம் கடந்த 29 ஆம் திகதி நள்ளிரவு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வீதியிலுள்ள தனியார் பல்பொருள் அங்காடியில் இடம்பெற்றது.

புகைப்படச் சுருள்கள், பற்றறிகள், சுடுதண்ணீர் போத்தல்கள், மணிக் கூடுகள், கிறீம் வகைகள், விளையாட்டுப் பொருள்கள் போன்றவையே திருடப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக கடை உரிமையாளர் நெல்லியடி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதே வேளை - கடந்த மாத முற்பகுதியிலும் நெல்லியடி பஸ் நிலையப் பகுதியில் உள்ள சில வர்த்தக நிலையங்களிலும் திருடர்கள் தம் கை வரிசையைக் காட்டியுள்ளனர், (ஐ - 109)

# பாராட்டு வைபவம்

அரியாலை, ஒக். 7

யாழ்.பலநோக்கு கூட்டுறவு சங்க விளையாட்டு கழக அணியினரை பாராட்டி கௌரவிக்கும் வைபவம் சென்ற வெள்ளிக்கிழமை சங்கத்தின் கேட்போர் மண்டபத்தில் இடம்பெற்றது.

சங்கத்தலைவர் சீ.வி.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. சண்முகநாதன் மற்றும் சங்கத்தின் [illegible] (இ-17)


உ

ஸ்ரீ முனீஸ்வரன் துணை

யாழ். கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தானம்

வாழ்த்தும் பாராட்டுதலும்

எமது தேவஸ்தான பிரதமகுருவும் யாழ். போதனா வைத்தியசாலை ஸ்ரீ சிவஞான வைரவ தேவஸ்தான பிரதம குருவுமாகிய

சிவத்திரு. ப. காயாரோகணசிவக்குருக்கள் அவர்கட்கு

மேற்படி தேவஸ்தான மண்டலாபிஷேக பூர்த்தி தினமான சங்காபிஷேக தினத்தன்று (29 - 09 - 97) சிவாகம பூஷணம் என்னும் சிறப்புப்பட்டத்தை அளித்தமைக்காக ஸ்ரீ சிவஞான வைரவ தேவஸ்தான அறங்காவலர்களையும் குருக்கள் ஐயா அவர்களையும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தி எமது பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிவத்திரு. ம. ஞானசேகரம்.
முனீஸ்வரன் தேவஸ்தான
பரிபாலகரும் பூசகரும்

(50350)



கண்ணீர் அஞ்சலி

அமரர் சின்னத்தம்பி சந்திரசேகரம்.

(இ. பெ, கூ. தா முன்னாள் டிப்போ அதிகாரி
யாழ்ப்பாணம்
உதவி விநியோக முகாமையாளர் கொழும்பு)

30 - 09 - 97 அன்று கொழும்பில் காலமான அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கும், உறவினர், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கண்ணீர் அஞ்சலிகள் செலுத்துகின்றோம்.

டிப்போ அதிகாரியும், பணியாளர்களும்
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
காங்கேசன் துறை.

(50401)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஆனைக்கோட்டை, பொன்னையா லேன் (தபால் கந்தோருக்கு அருகில்) 2 பரப்பு காணியில் சகல வசதிகளும் கொண்ட வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K. செந்தில்நாதசர்மா, NO,361, Temple Road, நல்லூர்.
[50322]

## தவறவிடப்பட்டன

மகாலிங்கம் ரமேஸ்குமார் ஆகிய எனது தேசிய, விசேட, உத்தியோக அடையாள அட்டைகள் மற்றும் ஆவணங்கள் என்பன யாழ். நகரில் தவற விடப்பட்டன. கண்டெடுத்தவர்கள் அங்கிளின் புடவைக் கடையில் ஒப்படைத்து உதவவும்.
(50329)

## தவறிவிட்டன

கோண்டாவிலைச் சேர்ந்த அம்பலம் ஆனந்தராசா என்பவரது 671352947V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை மற்றும் விசேட அடையாள அட்டை, தொழில்சார் அடையாள அட்டை என்பன திருநெல்வேலி பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். யாழ். மாநகர சபை, யாழ்ப்பாணம்.
(50342)

செல்வநாயகம் செல்வதுஷ்யந் என்பவரது 763492532V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை மற்றும் விசேட அடையாள அட்டை என்பன பருத்தித்துறை வீதியில் இருபாலைக்கும் வல்வைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். இல. 117, கனகரெட்ணம் வீதி, அரியாலை.
(50349)

## விண்ணப்பப் படிவம்

லொத்தர் மூலம் தெரிவாகும் அமெரிக்க விசா படிவம் தயாரித்துக் கொடுக்கப்படும். மேலதிக விவரங்களுக்கு: நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்.
(50352)

## விடுமுறையில் சென்றோர் திரும்பவில்லை

சாவகச்சேரி ஆஸ்பத்திரி பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய வைத்திய அதிகாரியும் சுகாதார வைத்திய அதிகாரியும் சொந்த ஊருக்குச் சென்று ஒரு மாதமாகியும் இன்னும் கடமைக்கு திரும்பவில்லை என்று கூறப்படுகிறது.

கடமையாற்றிய மற்றைய வைத்திய அதிகாரியும் கடந்த புதன்கிழமை சொந்த ஊருக்குச் சென்று விட்டார்.

இதனால் இந்த ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளர்களை பதிவு பெற்ற வைத்திய அதிகாரிகளே பார்வையிடுவதாக தெரிவிக்கப்பட்டது.
(இ-117)

## இதய அஞ்சலி

### திருநாவுக்கரசு தர்மலிங்கம்

(பொருளாளர், ஆலய பரிபாலனசபை)

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கொழும்புத்துறை மேற்கு,
விநாயகர் ஆலய பரிபாலன சபையினரும்,
ஆலய அர்ச்சகரும்.
(50347)

## கண்ணீர் அஞ்சலி

த. தர்மச்சந்திரனின் தந்தையாராகிய

### திருநாவுக்கரசு தர்மலிங்கம்

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முதலாவது சாரணர் குழு
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.
(50344)

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் தம்பையா தாமோதரம்பிள்ளை

மண்ணில்;
17 - 10 - 1922

விண்ணில்:
07 - 10 - 1995

அப்பா;
ஆண்டிரண்டோ?
என்ன?
ஆயிரங்கள் போனாலும்
மீண்டும் நினைக்க நமக்கு மறப்பேது
எங்கள் உயிரணுவுள்
ஒவ்வோர் மயிர்க் காலுள்
சங்கமித்து நின்று என்றும்
எம்மைச் சரியாக
இன்றும் வழி நடத்தும்;
அப்பா!
சந்திர சூரியராய்
அன்பும், தயையும்,
அறிவும், பொருளுமாய்
ஒன்றாய்க் கலந்து
எம் உணர்வுகளின் மூட்டமாய்
நீங்கள் பொழியும் கருணை
மனுவற்ற எங்கள் விழிகள்
சொரியும் மணிமணிக்
கங்கைகளிற் புதிய
வாடாப் பூவாக
வடிவழகு காட்டுகிறீர்
கண்டு தொழுது
கரங்கூப்பி நிற்கின்றோம்
அப்பா.........!
என்றும் அப்பா அப்பா.

குடும்பத்தினர்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.
(50339)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய வைபவமும்

தோற்றம்:
15 — 05 — 1915



மறைவு:
08 — 09 — 1997

### அமரர் சின்னத்தம்பி குணரட்ணம்

[முன்னாள் லிகிதர், சாமுவேல் அன் சன்ஸ், கொழும்பு]

திதி: 08 — 10 — 1997

அன்னாரின் 31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியையும் வீட்டுக் கிருத்திய வைபவமும் நாளை 08 - 10 - 1997 புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பூசையிலும், மதிய போசன வைபவத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. கு. குகன்.
[மகன்]

''குணபூரண வாசா''
உடுப்பிட்டி.
[50337]

## முதலாண்டு நினைவஞ்சலி



### திருமதி அருணாசலம் கமலாம்பிகை

அன்னை மடியில்:
01 — 07 — 1934

ஆண்டவன் அடியில்:
07 — 10 — 1996

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்

116, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(50304)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தீர்வு யாருக்காக?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாகப் புறப்பட்ட அரசாங்கம், தமிழர்களின் அடிப்படை அரசியல் அபிலாசையைப் புறக்கணிக்க முனைந்திருப்பது பெரும் அதிருப்தியையும் கவலையையும் உண்டாக்கியிருக்கிறது; அரச எதிர்ப்பு உணர்வைப் பெருக்கி உள்ளது.

இணைந்திருக்கும் தமது தாயகத்தை உடைத்து, இரண்டு மூன்று துண்டுகளாக மாற்றுவதே, கிழக்கில் மூன்று சர்வஜன வாக்கெடுப்புகள் நடத்துவதன் நோக்கம் என்பதே தமிழரின் பொதுவான கருத்து.

வடக்கு – கிழக்கு இணைந்த பிரதேசத்தில் தன்னாட்சி அதிகாரமுள்ள நிறைந்த இறைமை கொண்ட தனியரசு ஒன்று (தனிநாடு) நிறுவப்பட வேண்டும் என்பதே தமிழர்களின் முக்கிய அரசியல் அபிலாசை,

1974 இல் இயற்றப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை அங்கீகரித்து, 1997 பொதுத் தேர்தலில் அவர்கள் வாக்களித்திருந்தனர்; தாங்கள் இரண்டாந்தரப் பிரசைகளாக இல்லாமல் சுதந்திரமாக வாழ்வதற்கு அதுவே ஒரே வழி என்று முடிவு செய்திருந்தனர்.

அவர்களின் அந்தக் கோரிக்கையை கொழும்பு அரசுகளால் ஏற்றுக் கொள்ள முடியாதெனில் அதற்கு மாற்றீடாக, அவை ஒரு தீர்வை முன் வைப்பதே உகந்த வழிமுறை.

தமது தனிநாட்டுக் கோரிக்கைக்கு மாற்றீடாக வழங்கப்பட்ட தீர்வுகள் எதனையுமே அவர்கள் இதுவரை ஏற்கவில்லை. மாவட்ட சபை, மாகாண சபை ஆகியன தமிழர்களின் கோரிக்கைக்குக் கிட்டவும் நிற்கவில்லை என்பதனை பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஏற்றுக்கொண்டது. தமிழர்களுக்குப் பிரச்சினைகள் இருப்பதாக ஏற்றுக்கொண்டு அவற்றைச் சமாதான வழியில் தீர்ப்பதாக வாக்குறுதி அளித்தது.

ஆனால் ஏற்கனவே உள்ள பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாகப் பல புதிய பிரச்சினைகளை உருவாக்குவதாகவே அரசின் திட்டம் உள்ளது.

வடக்கு—கிழக்கு பத்து வருடங்களாக இணைந்திருக்கிறது. கொழும்பு அரசுகள் தமது பலவீனத்தால் குறிப்பிட்ட காலத்தில் இலங்கை—இந்திய ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவில்லை. இப்போது அந்த விவகாரத்தைக்கிளறி நிலைமையைக் குழப்ப முயல்வது ஏன்?

கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தக் கூடாது என தம்மிடம் கேட்ட தமிழ்க் கட்சிகளுக்கு, அரசமைப்பு அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் அளித்த பதில் விசித்திரமானது. வாக்கெடுப்பு பத்து வருடங்களாக, வருடா வருடம் ஒத்திவைக்கப்பட்டு வருகிறது. இனியும் அதனை ஒத்திவைக்கத் தயாரில்லை—என்று கூறியுள்ளார்.

இணைப்புச் சம்பந்தமான சர்வஜன வாக்கெடுப்பை நடத்தாவிடில் சிங்கள மக்களின் எதிர்ப்பைப் பெருமளவில் தேடிக் கொள்ள நேரிடும் என்றும் அவர் சொல்லியுள்ளார்.

தமிழர்களுக்கு உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பது என்பது அவர்களது நலன் நாடியிருப்பதே உகந்ததும் பொருத்தமானதும் ஆகும். சிங்கள மக்கள் நலனுக்கே முன்னுரிமை கொடுத்து, அவர்களின் வாக்குகளை இழக்கக் கூடாது என்ற நோக்குடன் தீர்வுக்கு முயன்றால் அது வெற்றியளிக்காது.

தீர்வு தமிழ் மக்கள் நலனுக்காகவா, சிங்கள மக்கள் நலனுக்காகவா என்பதனை அரசு தீர்க்கமாக முதலில் முடிவு செய்யட்டும். சிங்கள மக்கள் நலன்கருதியெனில் அது ஒரு பக்கச் சார்பாகவே அமையும்; அதில் சந்தேகமில்லை.

---

### வீடு பார்க்கச் சென்ற சமயம்

# கிளிநொச்சியில் கைதான 22 பேர் நேற்று விடுவிப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 7

கிளிநொச்சிப் பகுதியில் வீடு பார்க்கச் சென்ற சமயம் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட 22 பேர்நேற்று யாழ். நீதிமன்றில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர்.

கிளிநொச்சியில் இருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து பல்வேறு பகுதிகளிலும் தங்கி இருந்த 22 பேர் கடந்த இரண்டாம் திகதி வீடு பார்க்கச் சென்றசமயம் திருவையாறுப் பகுதியில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை ஆனையிறவு இராணுவ முகாமிற்குக் கொண்டு சென்ற இராணுவத்தினர் அங்கு அவர்களை விசாரணை செய்தனர். விசாரணையின் போது அவர்கள் குற்றமற்றவர்கள் எனத் தெரியவந்ததை அடுத்து நேற்று திங்கட்கிழமை யாழ். நீதிமன்றில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலையான அனைவரையும் கிளிநொச்சி அரச அதிபரிடம் கையளிக்கும் வரை யாழ். அரச அதிபர் பராமரிக்க வேண்டும் என யாழ். பதில் நீதிவான் ச. அரியநாயகம் உத்தரவிட்டார்.

கைது செய்யப்பட்டு விடுவிக்கப்படுவோரின் பெயர் விவரங்கள் வருமாறு:-

★ கிளிநொச்சி செல்வபுரத்தைச் சேர்ந்த தோமஸ் ராஜேந்திரன், பரமு தேவராசா, ஜயசிங்க வசந்தகுமார், ரெட்ணம் கதிரமலை, நாகமணி துரைராசா, ரகுநாதன் பாபு, அருணாசலம் சுப்பிரமணியம், ராமநாதன் சிவகுமார், கறுப்பையா தேவ செல்வரத்தினம்.

★ கிளிநொச்சி முருகண்டியைச் சேர்ந்த சின்னையா பூமாலை, எம். ஜயசிங்கம், அரசன் இராசையா, ரெங்கன் தனராஜ், மருதை மாணிக்கம், ராமசாமி கந்தையா, கந்தையா அஜித்குமார், விஜயன் ரகுநாதன், நாகமுத்து இரத்தினம்.

★ கிளிநொச்சி சாந்தபுரத்தைச் சேர்ந்த வல்லிபுரம் கந்தையா, குருசாமி மனோகரன்.

★ கிளிநொச்சி புத்துவெட்டுவானைச் சேர்ந்த இராசையா கேசவன், சுப்பையா தங்கவேலு.

இந்த 22 பேரும் யாழ். செயலகத்துக்குச் சமீபமாகவுள்ள வீடு ஒன்றில் வைத்துப் பராமரிக்கப்படுகின்றார்கள். இவர்களைக் கப்பல் மூலம் மன்னாருக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.

[உ-3-9-15]

## ஆசிரியர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 7

நேற்று சர்வதேச ஆசிரியர் தினத்தை ஒட்டி யாழ். குடாநாட்டில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களை கௌரவிக்கும் பல்வேறு நிகழ்ச்சிகள் பல மட்டங்களிலும் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவை இணைந்து கல்லூரி அதிபர், ஆசிரியர்களை கௌரவிக்கும் விதத்தில் விருந்துபசார நிகழ்வு ஒன்றை நடத்தியது.

(உ)

## சூட்டுக்குப் பலி

வடமராட்சி, ஒக். 7

மந்திகை மருத்துவமனைக்கு முன்பாக சிறு வர்த்தக நிலையம் ஒன்றை நடத்தி வந்த நபர் ஒருவர் கடந்த சனி அன்று இரவு 7 மணியளவில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இறந்தவர் கரணவாய் பகுதியைச் சேர்ந்தவர் ஆவார். இவர் கடந்த சில மாதங்களுக்கு முன்பும் இனந்தெரியாதோரின் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்து சிகிச்சை பெற்றவர் எனத்தெரிவிக்கப்பட்டது. (ஐ-109-173)

## சு. க. அமைப்பாளர் வந்து திரும்பினார்

குருநகர், ஒக். 7

சுட்டுக் கொலை செய்யப்பட்ட ஸ்ரீ. ல. சு. கட்சியின் யாழ். மாவட்டக் கிளைத் தலைவர் தி. தர்மலிங்கத்தின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகவும் அவரின் குடும்பத்துக்கு ஆறுதல் தெரிவிப்பதற்காகவும் அக்கட்சியின் வடமாகாண அமைப்பாளர் வேல்முருகு தங்கராசா நேற்றுக் காலை விமானத்தில் யாழ்ப்பாணம் வந்தார்.

இரங்கல் தொடர்பான நிகழ்வுகளில் பங்கு பற்றிய பின்னர் நேற்றே அவர் கொழும்பு திரும்பினார்.

(உ-51)

# சுகாதாரத் திணைக்கள பயிலுநர் பரீட்சை

## யாழ்ப்பாணத்தில் நடக்கும்

சுகாதாரத் திணைக்களத்தின் பயிலுநர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை விரைவில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் என்று சுகாதார அமைச்சு அதிகாரிகள் உறுதியளித்துள்ளதாக ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ். அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் நடைபெறவிருந்த மேற்படி நேர்முகப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து நூற்றுக்கணக்கானவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

போக்குவரத்து வசதியில்லாத காரணத்தால் இப்பரீட்சைக்குப் பலர் தோற்ற முடியாததையடுத்தே அதனை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

### பாலைதீவு படகு விபத்து:

# நால்வரின் சடலங்கள் வேலணையில் ஒதுங்கின

யாழ்ப்பாணம், ஒக். 7

பாலைதீவுக் கடலில் படகு விபத்தில் பலியானதாகக் கருதப்படும் 14 பேரில் நான்கு பேரின் சடலங்கள் நேற்று வேலணைக்கரையில் ஒதுங்கின.

மூழங்காவிலில் இருந்து ஊர்காவற்றுறை நோக்கி பயணிகளுடன் சென்று கொண்டிருந்த படகு ஒன்று கடந்த வெள்ளியன்று கடலில் மூழ்கியது தெரிந்ததே.

இந்தப்படகில் பயணம் செய்து உயிர்தப்பிய வேலணையைச் சேர்ந்த [illegible] குடும்பத்தைச் [illegible] சடலமுமே கரையொதுங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

# ஐ.நா. தூதரகம் மூலம் 500 வீடுகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ். மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்தவர்களில் 500 குடும்பங்களின் வீடுகளை புனரமைக்க அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் முன் வந்துள்ளது.

தெல்லிப்பழை, உடுவில், சண்டிலிப்பாய், கோப்பாய், தீவுப்பகுதி, யாழ். கரையோரம் ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ளவர்களில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களின் 500 வீடுகளே புனரமைக்கப்பட உள்ளன.

வீடுகளை புனரமைக்க ஒவ்வொரு குடும்பங்களுக்கும் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான கட்டடப் பொருள்கள் வழங்கப்படும்.

அடுத்தவருடம் கூடுதலான வீடுகளைப் புனரமைக்க உதவி வழங்க இந்த அமைப்பு உறுதியளித்துள்ளதாக யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதேநேரம் மக்கள் மீளக்குடியமரும் பகுதிகளில் பாரிய மரங்களையும், புதர்களையும் வெட்டி சீரமைக்க 7 லட்சம் ரூபாவை இந்த அமைப்பு வழங்கியுள்ளது.

(இ-3)

## இறைச்சிக்கடை உரிமையாளர் பகிஷ்கரிப்பு

குருநகர், ஒக். 7

யாழ். விலை மதிப்புத் திணைக்களத்தால் மாட்டிறைச்சிக்கு விதிக்கப்பட்டிருக்கும் விற்பனை விலையை ஆட்சேபித்து குருநகர் சின்னக் கடைப் பகுதியைச் சேர்ந்த மாட்டிறைச்சிக்கடை உரிமையாளர்கள் நேற்று கடைகளை மூடி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இதனால் இறைச்சி வாங்குவதற்காக வந்த பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

ஒரு கிலோ மாட்டிறைச்சியின் விற்பனை விலை 90 ரூபா என விலை மதிப்புத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இறைச்சிக்கான மாடுகள் நியாய விலையில் கிடைத்தால் மட்டுமே தற்போதைய விற்பனை விலையைத் தம்மால் ஏற்றுக் கொள்ள முடியும் என்றும் —

அதுவரை புதிய விலையை ஆட்சேபித்து தாம் பகிஷ்கரிப்பில் ஈடுபடப் போவதாகவும் இறைச்சிக்கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

(ஐ-51)

**நாளை**

**புரட்டாதி 22**

புதன்கிழமை

திதி: ஸப்தமி

பின் இரவு 2.15 வரை.

நட்சத்திரம்: மூலம்

முன் இரவு 10.35 வரை.

சரஸ்வதி பூஜாரம்பம்

சுபநேரம்: 4.32-6.02

ராகுகாலம்: 12.02-1.32

([illegible]க்கும் இரவுக்கும் [illegible] தேர்ப்படி)

## பாதுகாவலர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 7

கைதாகி காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டம் நாளை பிற்பகல் 2 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவிருப்பதால் நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கூட்டத்தில் பங்குபற்றும்படி சங்கம் அழைத்துள்ளது. (உ)

## காயமடைந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 7

தனக்குத்தானே தீ மூட்டியதாகக் கூறி உடல் முழுவதும் எரிகாயங்களுடன் கடந்த 30 ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர் நேற்று முன் தினம் அங்கு மரணமானார்.

குருநகரைச் சேர்ந்த வில்லியம் சிங்க. ஸ்ரீ மந்தா (வயது 34) என்பவரே உயிரிழந்தவராவார்.

(ஐ-15-51)

## தங்கத்துரை நினைவுக் கூட்டம்

கொழும்பு, ஒக். 7

தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் அ. தங்கத்துரையின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று மாலை 5 மணிக்கு கொழும்பு தர்மபால மாவத்தையிலுள்ள ஜே ஆர். ஜெயவர்த்தன கலாசார நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அமைச்சர்கள் தர்மசிறி சேனநாயக்கா, எம். எச். எம். அஷ்ரப், கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம், அதன் செயலாளர் இரா. சம்பந்தன், லங்கா சமசமாஜக் கட்சியின் செயலாளர் பற்றி வீரக்கோன் ஆகியோர் உட்படப் பலர் நினைவுரையாற்றவுள்ளனர். (ஐ)

## சிறுவர் தின விழா

யாழ்ப்பாணம், ஒக். 7

சர்வதேச சிறுவர்தினத்தை ஒட்டி வலி. தெற்கு பிரதேச செயலர் பிரிவினர் ஏற்பாடு செய்துள்ள விழா இன்று செவ்வாய்க் கிழமை பிரதேச செயலர் பணிமனையில் நடைபெறவுள்ளது. சிறுவர் தினத்தை ஒட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு விழாவில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

## அதிபர்கள் கூட்டம் நடைபெறாது

வேம்படி மகளிர் கல்லூரியில் நாளை புதன்கிழமை பிற்பகல் 2-00மணிக்கு நடைபெறவிருந்த யாழ்ப்பாணம். நல்லூர் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பொன்னாலையில் நிலக்கண்ணிகள் மீட்பு!

கடந்த வெள்ளியன்று பொன்னாலைப் பாலத்தைத் திருத்தும் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் அங்கு இரண்டு நிலக்கண்ணி வெடிகளைக் கண்டுபிடித்து மீட்டதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு; திருமலை ஆயர் இன்று யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஒக். 7

திருகோணமலை மட்டக் களப்பு மறைமாவட்ட ஆயர் அதிவண. கிங்ஸ்லி சுவாம் பிள்ளை இன்று யாழ்ப்பா ணம் வருகிறார்.

எதிர்வரும் 13 ஆம் திகதி வரையாழ்ப்பாணத்தில் தங்கி யிருக்கும் ஆயர், பொது நிகழ்ச்சிகள் சிலவற்றில் பங்கு பற்றுவதுடன் மறை வட்டத்துடன் கலந்துரையா டல்களிலும் பங்குபற்றுவார். (உ-3)

## சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 7

சாவகச்சேரி மட்டுவில் பகு தியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக் கிச்சூட்டுச் சம்பவத்தின் போது உயிரிழந்ததாக இனந் தெரியாத ஒருவரின் சடலம் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் சாவகச்சேரி பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்டது. இனம் காணும்பொருட்டு அச் சட லம் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள் ளது. (ஐ-15)

## நோபல் பரிசு

நியூயோர்க், ஒக். 7

அமெரிக்காவைச் சேர்ந்த உயிரியல் விஞ்ஞானியான ஸ்ரான்லி பிரஷேர் மருத்து வத் துறைக்கான நோபல் பரிசைப் பெற்றுள்ளார்.

ஒருவகை ஞாபகமறதி, மற் றும் மாட்டுப்பைத்திய நோய்க் கான காரணியைக் கண்டு பிடித்ததற்காக இப்பரிசு அவ ருக்கு வழங்கப்பட்டுள்ளது. (ஐ)


எமது ஒரிஜினல் வெளியீடுகள்!

சிரஞ்சீவியின்

♥ காதல் தேவதை

Dr. ராஜசேகர், நக்மா

♥ ஊர்ம யோகி

ரகுமான், அர்ச்சனா

♥ பாரத் பந்த்

என்றும் தரமான CD பிரதிகளுக்கு

சுப்பஸோ வீடியோ

யாழ்ப்பாணம்

(சி/1713)



யாழ் WESCO

மருந்தகத்தின் சேவைகள்,

- போட்டோ பிரதி (Photo copy)
- கவரிடுதல் (Laminating)
- றோணியோ
- தமிழ், ஆங்கில தட்டச்சு

– குறைந்த விலை!

– நிறைந்த தரம்!!

– துரித சேவை!!!

மொத்த விலைக்கு விசேட கழிவு

470 (250), ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

(யாழ். O.P.D. முன்பாக)

மருந்து ✠ பால்மா ✠ பல்பொருள்

(சி/1686)


# நீங்கா நினைவினில்...



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 06 — 04 — 1977 | 19 — 08 — 1996 |

## செல்வன் யோகீஸ்வரன் நிருத்தன்

( யாழ். இந்துக் கல்லூரி மாணவன் )

நெஞ்சமெல்லாம் நிறைந்தவனே நம் திருவே நிருத்தா!
மொட்டாகி மலராகிப் பிஞ்சினிலே மறைந்தாய்
இளவரசே! இன்று உன்னைக் காணாமல் ஏங்குகிறோம்!
இளமதியே! உன் உருவை நினைந்து நினைந்து
எங்கே நீ எங்கே நீ என்று நித்தம்கேட்டு
இறைவனிடம் கை ஏந்தி நின்றோமடா?
இறைவனிடம் சென்றுவிட்ட எமது பெருநிதியே
உன் ஆத்மா சாந்தி அடையட்டும்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உன் பிரிவால் துயருறும்:
அம்மா, சகோதரி, சகோதரர்கள்.

ஏழாலை மேற்கு,
சுன்னாகம். (சி/1172)

### மாத்தறை சத்தியாக்கிரகத்தின் போது

# தேங்காய்கள் உடைத்ததற்கு பிக்குமார் சிலர் ஆட்சேபம்

சிங்கள ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பாக அமைச்சர் மங் கள சமரவீர தெரிவித்த கருத் துக்களுக்கு ஆட்சேபம் தெரி வித்தும் அதற்காக அவர் மன் னிப்புக் கேட்க வேண்டும் எனக் கோரியும் மாத்தறை போதிராஜ விகாரையில் நேற்று முன்தினம் பௌத்த பிக்குகள் நடத்திய சத்தியாக் கிரக நடவடிக்கையை மகா சங்கத்தின் ஒரு பிரிவினர் கண்டித்துள்ளனர்.

சத்தியாக்கிரகத்தின் போது அமைச்சர் சமரவீரவை தெய்வ நிந்தனைக்கு ஆளாக் கும் நோக்கில் தேங்காய்கள் உடைக்கப்பட்டன. செத்கள் ஓதப்பட்டன.

இந்த நடவடிக்கை பௌத்த சாசனத்துக்கும், மகாசங்கத் தினருக்கும், இலங்கை பௌத்த மக்களுக்கும் அவ மானத்தை ஏற்படுத்தும் செயல் என்று மாத்தறை மாவட்ட பௌத்த மதகுரு தெரிவித்துள்ளார்.

சத்தியாக்கிரகத்தின் போது பௌத்த குருமார் மத்தியில் அபிப்பிராய பேதம் காணப் பட்டமை அழிவு ஏற்படுவதற் கான அறிகுறியாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பௌத்த குருமார் இந்து சமய முறைப்படி தேங்காய் களை உடைத்து செத் பிரித் ஓதியமை தமக்கு அதிர்ச்சி யையும் கவலையையும் ஏற் படுத்தியிருப்பதாக மாத்தறை மாவட்ட பௌத்த காந்தா சங் நிதானவின் செயலாளர் திருமதி திஸநாயக்கா தெரி வித்துள்ளார்.

இதேவேளை —

அமைச்சர் மங்கள சமரவீர மத அனுஷ்டானங்களில் பங்கு கொள்வதைத் தடை செய்வதற்கு எடுக்கப்படும் முயற்சிக்கு எதிராக ஒரு லட் சம் பேரின் கையொப்பங்கள் அடங்கிய மகஜர் ஒன்றை மாத்தறை மாவட்ட இளை ஞர் அமைப்பு ஒன்று தயாரித் துள்ளது. (ஐ)

## உபிரிழப்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

வனம் நேற்று மாலை தெரி வித்தது.

அநுராதபுரத்தில் உள்ள — இறுதிச் சடங்குகளைப் பொறுப்பேற்று நடத்தும் — நிறுவனமொன்றிடம் 48 படையினரின் சடலங்கள் நேற்று ஒப்படைக்கப்பட்ட தாக வவுனியாவில் உள்ள பத் திரிகையாளர் ஒருவர் பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு தெரி வித்தார்.

புலிகளின் ஆட்லறிப்பீரங்கி களின் தாக்குதல்களினா லேயே படையினருக்கு அதிக அளவு இழப்புகள் ஏற்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டது.

பிந்திய சமரில் தமக்கு ஏற் பட்ட இழப்புகள் குறித்து புலிகள் விடுத்த அறிவிப்பு ஏதும் இதுவரை உதயனுக்குக் கிடைக்கவில்லை. (உ-ஐ-3)

## ஒட்டுசுட்டான...

(முதலாம் பக்கத் தொடர்)

அப்பால் வவுனியா வரை எதிரொலித்தது.

ஷெல் மற்றும் குண்டு வெடிப்புச் சத்தங்களால் போர் முனைப் பிரதேசம் தொடர்ந்து அதிர்ந்துகொண் டிருந்ததாக நேற்றிரவு தெரி விக்கப்பட்டது.

தொடர்ந்து 36 மணித்தி யாலங்களுக்கு மேலாக குண்டு வெடிப்புச் சத்தங்க ளைத் தாம் கேட்டதாக வவுனியா எல்லைப் பிரதேச கிராமவாசிகள் தெரிவித்த னர்.

போர் முனையில் காயம டைந்த வீரர்களை ஏற்றி யிறக்கும் பணியில் ஹெலிகள் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருந்தன.

யுத்த களத்தில் காயமுற்று விமானம் மூலம் இரத்ம லானை விமானத் தளத்துக்கு ஏற்றி வரப்படும் சிப்பாய்கள் மற்றும் அதிகாரிகளை அம்பு லன்ஸ்கள் அங்கிருந்து ஏற்றிக் கொண்டு கொழும்பின் பல் வேறு ஆஸ்பத்திரிகளுக்கும் செல்வதாகவும் —

இவ்வாறு காயமுற்ற படை யினரை ஏற்றிக் கொண்டு அவசரமாகச் செல்லும் அம்பு லன்ஸ்களின் சத்தத்தைத் தொடர்ந்து தலைநகரில் கேட் கக் கூடியதாக இருப்பதாக வும் —

கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

ஒட்டு சுட்டானுக்கு அருகே மாங்குளம் — முல்லைத்தீவு வீதியில் புலிகளின் வசமுள்ள பகுதிக்குள் மேலும் முன்னே றிச் செல்ல படையினர் முயன்ற போதே புலிகளின் அணி ஒன்று அவர்களைத் தாக்கியதாகவும் —

அதைத் தொடர்ந்து உக்கி ரச் சமர் வெடித்ததாகவும் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

## அறந்தலாவ...

(முதலாம் பக்கத் தொடர்)

பொலீஸ் நிலையம் முற்றா கத் தீக்கிரையாக்கப்பட்டது. அங்கிருந்த பொலீஸாரின் எட்டு பங்கர்கள் நாசமாக்கப் பட்டன.

அங்கிருந்த ஏழு பொலீஸா ரும், ஊர்காவல்படை வீரர் ஒருவரும் பலியானதாகவும்—

ஏழு பொலீஸார் காணா மற் போயுள்ளதாகவும் மட் டக்களப்பில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரி வித்தன.

பொலீஸ் நிலையத்தில் இருந்த எல். எம். ஜி. துப் பாக்கிகள் ஐந்தும், ஆர். பி. ஜீ. துப்பாக்கிகள் இரண்டும், மோட்டார்கள் இரண்டும் புலிகளால் கைப்பற்றப்பட்ட தாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து மட்டு — அம் பாறை மாவட்ட எல்லைப் புறக் காட்டுப் பகுதிகள் மீது கடும் விமானத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இத்தாக்குதலில் எட்டுப் பொலீஸார் பலியாக 15 பேருக்கு மேல் படுகாயம டைந்தனர் எனவும்—

பொலீஸ் நிலையத்திலி ருந்த அனைத்து ஆயுதங் களையும் புலிகள் அபகரித் துச் சென்றனர் எனவும்—

வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

தாக்குதல் இடம்பெற்ற பகுதிக்கு மீட்பு நடவடிக் கைக்காக வர முயன்ற படை யினரையும் புலிகள் இடை யில் வழிமறித்துத் தாக்கி யதாக வெரித்தாஸும் இந் திய வானொலியும் தெரி வித்தன. [உ-ஐ-3-21]

## வாதுவவில் பொருள்

பருத்தித்துறை துறைமுகத் தல் " வாதுவ " கப்பலி லிருந்து அத்தியாவசியப் பொருள்கள் இறக்கப்பட்டு வருகின்றன.

இன்னமும் ஒருவார காலத் துக்குள் இக்கப்பலிலிருந்து பொருட்கள் இறக்கி முடிக் கப்படும் என துறைமுக வட் டாரங்கள் தெரிவித்தன.

## 5 வாக்கெடுப்...

(முதலாம் பக்கத் தொடர்)

டணிப் பிரதிநிதிகள் வலியு றுத்தினர்.

தற்போதைய நிலையில் கிழக்கில் சர்வஜன வாக்கெ டுப்பு நடத்தக் கூடிய சூழ் நிலை ஏதும் இல்லை என் றும் —

இந்திய — இலங்கை ஒப் பந்தத்தில் கூறியது போன்று அதிகாரத்தைஇப்போதைக்கு இணைந்த வடக்கு- கிழக்குப் பிரதேசத்துக்கு வழங்கிவிட்டு — பின்னர் சூழ்நிலைசரியாக வருகின்ற ஒரு காலத்தில் — கிழக்கில் சர்வஜன வாக்கெ டுப்பை நடத்தலாம் என் றும் —

முஸ்லிம்களுக்கான தென் கிழக்கு மாகாண அலகையும் சர்வஜன வாக்கெடுப்பு இன் றியே இப்போதைக்கு வழங்க லாம் என்றும் —

முஸ்லிம் காங்கிரஸ் வற் புறுத்திக் கூறியதாகத் தெரி கின்றது.

இந்த விடயங்களைச் செவி மடுத்த ஜனாதிபதி, சர்வஜன வாக்கெடுப்பு நடத்தால் விடுவது குறித்தோ அல்லது அதனைப் பிறிதொரு காலத் துக்கு ஒத்திவைப்பது குறித்தோ அமைச்சரவை மற் றும் தமது கட்சிகளிடம் ஆலோசித்து மறுபரிசீலனை செய்த பின்னர் முடிவை அறி விப்பதாகக் கூறினார்.

புலிகளுடன் பேச்ச நடத் தும்படி விடப்பட்ட கோரிக் கைக்கு பதிலளித்த ஜனாதி பதி —

"புலிகளுடன் பேசலாம். ஆனால் அதன் தலைவர் பிரபாகரன் நேரடியாகப் பேச்சு நடத்துவதே நல்லது— என்றார்.

"பிரபாகரனுடனேயே நான் பேசவிரும்புகின்றேன். இந்தியாவில் பிரபாகரன் இருந்த போது நான் அவரு டன் நேரில் பேசியிருக்கின் றேன். அது போல பேச லாம். புலிகளுடன்பேசவேண் டியது கட்டாயமானதே. பிரபாகரன் இல்லாமல் வேறு ஒரு பிரதிநிதியுடன் பேசி னால் அவர்கள் உடனே முடி வைச் சொல்பவர்களாக இருப்பதில்லை. எல்லாவற் றுக்கும் 'கேட்டுச் சொல் கின்றேன்' என்றுதான் பதில் கூறுவர். எனவே பிரச்சி னைக்கு உடனுக்குடன் தீர்வு காண்பதற்கு பிரபாகரனு டன்தான் ஒரே மேசையிலி ருந்து பேச வேண்டும்." — என்று ஜனாதிபதி பதிலளித்த தாகத் தெரியவந்தது. (உ-21)

## கிழக்குப் பகுதி...

(முதலாம் பக்கத் தொடர்)

பட்டிருந்தன. ஆசிரியர்கள் கறுப்புப்பட்டி அணிந்து கட மைக்கு வந்தனர்.

1995—96 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 14 மாதங் களுக்கான ஆபத்துக்கால கொடுப்பனவு வழங்கப்படாததை யும், அதிபர்களின் சம்பள முரண்பாடு நீக்கப்படாததையும், பயிலுநர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதில் புறக்கணிப்பு இடம்பெறுவதையும் சுட்டிக்காட்டி அவற்றுக்கு ஆட்சேபம் தெரிவிப்பதற்காகவே நேற்றைய நாளை கிழக் குப்பகுதி ஆசிரியர்கள் துக்கதினமாக அனுஷ்டித்தனர்.

## 3 ஹெலிகள்..

(முதலாம் பக்கத் தொடர்)

நடத்திய 'பெல் 212' ரக ஹெலி ஒன்றின் மீதும் ரஷ்ய தயா ரிப்பு 'எம். ஐ-24' ரக ஹெலி ஒன்றின் மீதும் புலிகள் திருப் பித் தாக்குதல் நடத்தி அவற்றைச் சேதமுற வைத்தனர்.

எம். ஐ - 24 ரக ஹெலியில் இருந்த விமானப்படை சுடு கலச் சிப்பாய் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந் தார். அதே சமயம் பெல் ரக ஹெலியின் இணை விமானி யும் புலிகளின் தாக்குதலில் படுகாயமடைந்தார்.

இதே சமயம் நேற்று மூன்றாவது ஹெலி ஒன்று புலிக ளின் தாக்குதலில் சேதமடைந்ததாகப் பிந்திக் கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது.

'எம். ஐ - 24' ரக ஹெலி ஒன்றே நேற்று சேதமுற்றது. அதில் இருந்த விமானப்படைச் சிப்பாய் ஒருவரும் காயமுற்ற தாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-ஐ-3-21)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரி யார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்கள் அச்சக மனையில் 07 - 10 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org